அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத்தொடுக்கவும்படலாம்: அத்துடன் அது பொது இலச்சினையொன்றை பயன்படுத்தவும், முழுத்தத்துவமும், அதிகாரமும் உடையதாயிருத்தலும் வேண்டும்.

**3.** (1) கூட்டுத்தாபனம் அமைத்துருவாக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும்:- கூட்டுத் தாபனத்தின் பொதுக் குறிக் கோள்கள்

(அ) மனிதவளங்கள் துறைசார் வல்லுனர்களுக்கு அவர்களின் பணிகள் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உதவி செய்வதற்காக ஒரு தகவல் மையமாகச் சேவை யாற்றல்;

(ஆ) பிரச்சினைகளைத் தீர்த்தல், சிநேகமாக நடந்து கொள்ளல் மற்றும் கருத்துக்களை பரிமாறுதல் என்பவற்றிற்காக மனித வளங்கள் துறைசார் வல்லுனர்களுக்காக ஒரு சங்கமாக சேவையாற்றுதல்;

(இ) சிறப்பான மனிதவளங்கள் நடைமுறைகளை ஊக்கு விப்பதற்காக பருவகால வெளியீடுகள், புத்தகங்கள் மற்றும் பத்திரிகைகள் தயாரிப்பதற்கும் வெளியிடு வதற்கும் மற்றும் தொடர்பாடலுக்கான எவையேனும் ஏனைய வழிமுறைகளைப் பயன்படுத்துவதற்கும்;

(ஈ) நிகழ்ச்சித்திட்டங்கள் /பணிமனைகள் /கருத்தரங்குகள் ஆகியவற்றை ஏற்பாடு செய்து மேம்படுத்துவதன் வாயிலாக மனித வலுசார் தொழில்துறையினருக்கு பயிற்சி மற்றும் அபிவிருத்தி உதவிகளை வழங்கள் மற்றும் மனிதவளங்கள் துறையில் அரசதுறை, தனியார்துறை, சர்வதேச முகவர்கள், ஏனைய நிறுவனங் களின் வேண்டுதலுக்கு இணங்க அவ்வாறான நிறுவனங் களுக்காக கற்கை மற்றும் ஆராய்ச்சி திட்டங்களை மேற்கொள்ளல்;

(உ) இலங்கையிலும் அதற்கு வெளியிலும் மனித வளங்கள் சார் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு, ஒத்துழைப்பு மற்றும் நட்பு ஆகியவற்றை மேம்படுத்தல்;

